[9th December 1959

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், அந் நகல் ஒன்று சட்டசபை முன் சமர்ப்பிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No report is required to be submitted by the State Industries Development Committee. The Committee will only generally advise Government on the development of industries in the State and on any specific matter that may be referred to it.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM : கிராமபுறங்களிலே குறிப்பாக ஹரிஜன காலனிகளில் ஆதிகாலத்திலே என்னென்ன தொழில்கள் நடைபெற்று வந்தன, அந்தத் தொழில்களின் நிலைமை தற்பொழுது எவ்வாறு இருக்கிறது. அந்தத் தொழில்களை மீண்டும் ஆரம்பிக்க முடியுமா என்ற பரிசீலனை சர்க்காரால் நடத்தப்பட்டதா ? அவ்வாறு நடத்தப்படாவிடின், மீண்டும் சர்வே எடுப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முக்கியமாக பொருளாதார நிலைமையில் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில், அவர்களை கை தூக்கும் வகையிலே என்னென்ன தொழில்களை அமைக்கலாம் என்பது அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

Aluminium plant

MR. SPEAKER : கேள்வி 77, 78 அண்டு 90-எ, இந்த மூன்று கேள்விகளும் அலுமினியம் தொழிற்சாலையைப் பற்றியது. ஆகையால் இந்த மூன்று கேள்விகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

*77 Q.—SRI P. G. MANICKAM AND SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்திலே அலுமினிய தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவதற்கான யோசனை திட்டத்தின் மீது இத்தாலிய ஸ்தாபனம் ஒன்றின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட அறிக்கையின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The report of the Italian Experts on Salem Aluminium Plant is encouraging. The Report contains the details of the quality and quantity of Salem Bauxite Deposits and the financial implications of the project.

*78 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தனியார் துறையில் அலுமினியம் தொழிற்சாலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆராய்ந்தறிய நியமிக்கப்பட்ட

9th December 1959]

கமிட்டியானது அதனுடைய ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டுக்கு அனுப்பிவிட்டதா ?

(ஆ) அந்த ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சட்டசபை முன் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Sub-Committee of Industrialists set up by the State Industries Development Committee to process the scheme of Aluminium Project at Salem was not expected to submit any report to Government. It was intended to advise the Government on any specific matter relating to the project that might be referred to it.

(*b*) Does not arise.

Aluminium deposits in Salem district

* 90-A *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any report has been submitted by the Italian Experts on the nature of aluminium deposits in Salem district, the use to which they could be put to;

(*b*) if so, whether a copy of the same will be laid on the table of the House; and

(*c*) the decision taken by the Government thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir. The report is treated as confidential.

(*c*) As the Plant will be set up in the private sector, there is no particular decision to be taken by Government.

SRI S. LAZAR : Sir, May I know, the stage at which the Project now stands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The report is under examination. Preliminary attention is being paid to the organisation of the industry.

SRI P. G. MANICKAM : தனியார் துறையிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கு யார் முன்வந்திருக்கிறார்கள்? அவர்களோடு சர்க்கார் என்ன நிபந்தனை செய்துகொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூரில் ஸ்ரீ. ஆர். வெங்கடசுவாமி நாயுடு அவர்கள் இந்தத் தொழிலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் மற்ற உதவியையும் நாடி, அந்த உதவிகளை வைத்துக்கொண்டு இந்தத் தொழிலை அமைப்பதற்கு இப்பொழுது முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.